***பாரதியின் தனித்துவம்***
**Bharti's uniqueness**

*முனைவர் க.சில்லாழி* / Dr K.Silllalee[2]
*பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்* / Professor Dr. M. Rajantheran[3]

*Manuscript received 22 Jun 2022*
*Manuscript accepted 15 September 2022*

***கட்டுரைச் சுருக்கம்***

*பாரதியார் தமிழர்க்குக் கிடைத்த மிகப்பெரிய பொக்கிஷம் ஆவார். தமிழ்ப் புதுக்கவிதையின் தந்தை இவர். எட்டையபுரத்தில் பிறந்து உலகமெங்கும் உள்ள தமிழர்களின் மனதிலெல்லாம் வாழ்பவர். இவர் தமிழுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை யாரும் மறுக்க இயலாது. உலகில் எத்தையோ கோடி மனிதர்கள் தினம் தினம் தோன்றி மறைகின்றனர். ஆனால் அதில் ஏதோ ஒருவர்தான் நிலையான புகழை அடைந்து காலத்தைக் வென்று மக்கள் மனதில் நிறைந்து வாழ்கிறான். அத்தையை வரிசையில் வைத்துப் போற்றத்தக்கவர் பாரதியார். மகாகவி பாரதி தன் சொல்லால் மட்டும் அல்லாது ஒவ்வொரு செயலாலும் தனது தனித்தன்மையையும் ஆளுமையையும் நிலைநிறுத்தியவர். அதனால்தான் சமகாலத்தில் பாரதி மிகப் பெரிய அளவில் தான் வாழ்ந்த சமுதாயத்தில் பெரிதாகப் போற்றப்படவில்லை போலும். ஆனால் பாரதி தன் வாழ்க்கையில் சந்தித்த அத்துணைப் போராட்டங்களையும், சோதனைகளையும், எதிர்ப்புகளையும் கடந்து வந்தவர். இதற்கு பாரதியிடம் இருந்த நெஞ்சுரம்தான் அடிப்படைக் காரணம். தன்னுடைய அசாத்திய தைரியத்தால் தனது வாழ்க்கையில் எழுந்த எல்லாச் சோதனைகளையும் துன்பங்களையும் கடந்து வந்தவர் பாரதி. பொதுவில் பலரது பாடல்களில் காணப்படும் சிந்தனைகள் அவர்களின் வாழ்க்கையிலும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால், பாரதியின் சொல்லும் செயலும் வேறு வேறல்ல என்பதற்கு அவரது எழுத்துகளும், வாழ்க்கையுமே ஆதாரங்களாகும். இச்சிந்தனையின் அடிப்படையில் இக்கட்டுரை பண்புசார் ஆய்வுக் கோட்பாட்டின் அடிப்படையில் பாரதியின் நெஞ்சுரத்தை நிறுவுவதாக அமைகிறது.*

***திறவுச்சொற்கள்***: *பாரதியார், தனித்துவம், தன்னம்பிக்கை, துணிவு, ஆளுமை*

## Abstract

Bharathi is a gift to Tamil Literature. He is hailed as the father of modern Tamil poems. Even though he comes from a remote village known as *Ettayapuram*, Bharati’s fame speedily grown to be known among Tamils from all over the world. Bharathi is a selfless man who lived for the people and nation. That’s why he is respectfully called Bhartahiyar. Bhartiyar’s contribution to Tamil literature touched many milestones. His works vigorously showed patriotic flavor, empowerment and outlined his vision for a reformed society. Some people born with great abilities that have changed society, culture, and humanity and Bhartahiyar have brought forth such credibility. He had significantly empowered humanity through his words and actions. His life journey was never a bed of roses. Although he was less appreciated throughout his time, he courageously faced every obstacle he had to overcome. He maneuvered through various trials and tribulations with great determination and tremendous courage. Furthermore, he followed what he preached, and his ideologies were reflected in the songs he had created as well as in his own life.

---

[2] The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. silllalee@um.edu.my
[3] The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajanmun@um.edu.my

His history manifested his greatness. His life and his literature evidently proved his strength of will and maintains his story indefinitely. Mediating this concept on Bharathiyar, this research paper focuses on the greatness of Bharatiyar's will power that dynamically reflects through his life.

**Keywords**: Bharathiyar, uniqueness, self-reliance, courage, leadeship

***முன்னுரை***

*மகாகவி பாரதியார் தமிழகம், உலகத் தமிழர்களுக்குக் கொடுத்த கொடைகளில் தனிச்சிறப்பு மிக்கது. புதுக்கவிதையின் தந்தையாகவும் நவீன இலக்கியத்தின் திறவுகோளாகவும் போற்றப்படுபவர் பாரதி. எதனையும் வித்தியாசமாகப் பார்ப்பதுதான் கவிஞரின் இயல்பு. ஆனால் பாரதியோ அதனையும் கடந்து தான் கவிதையில் கண்ட வித்தியாசத்தையெல்லாம் வாழ்ந்தும் காட்டியவர் (முருகேசன், 2015). அதனால்தான் என்னவோ அவரைப் பலரும் அக்காலத்தில் பைத்தியமாகக் கூட நினைத்திருக்கின்றனர். ஆனால், கவிஞனானவன் இவை அனைத்தையும் கடந்து சாதாரன மக்கள் யாரும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத உலகில் வாழ்பவர்கள். இவர்களுக்குப் புறவாழ்வைப் பற்றிப் பெரிய அக்கரை இருக்காது. தன் அகத்தில் பெரிய சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி செய்ய கூடியவர்கள் இவர்கள். பாரதி*

> *“யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்,*
> *வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்,*
> *பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,” (பாரதியார் கவிதைகள், 2015)*

*இதே வரிசையில் வைத்துப் போற்றுதற்கான அத்துணைத் தகுதிகளும் பாரதியிடத்திலும் உண்டு.*

*பாரதியாருக்குச் சொல்லும் செயலும் வேறு வேறு அல்ல. தன் கவிதையில் சொல்வதைச் செய்து காட்டக்கூடியவர். பொதுவில் கவிஞர்களிடத்தில் வித்தியா கர்வம் இருக்கும். ஆனால் பாரதியிடத்தில் வித்தியா கர்வம் இல்லை. ஆனால் அசாத்திய நெஞ்சுரம் இருந்தது. தன் வாழ்ந்த சமகாலத்தில் பாரதி தனது சமுதாயத்தால் பெரிதாகப் போற்றப்படவில்லை. ஆனால் பாரதி தன் வாழ்க்கையில் சந்தித்த அத்துணைப் போராட்டங்களையும், சோதனைகளையும், எதிர்ப்புகளையும் கடந்து வந்தவர். இதற்குப் பாரதியிடம் இருந்த நெஞ்சுரம்தான் அடிப்படைக் காரணம். தனது அசாத்திய தைரியத்தால் தனது வாழ்க்கையில் எல்லாச் சோதனைகளையும் துன்பங்களையும் கடந்து வந்தவர் பாரதி. பாரதியார் தனது சொற்களிலும் எழுத்துகளில் மட்டுமல்ல தனது வாழ்க்கையின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் தன்னுடைய அசாத்திய நெஞ்சுரத்தைக் காட்டியவர்.*

***ஆய்வு முன்னோடிகள்***

*ஓர் ஆய்வை மேற்கொள்ளும் முன்னர் அதற்கான ஆய்வு முன்னோடிகளைப் பற்றி அறிந்திருத்தல் அந்த ஆய்வை மிகச் செம்மையாக மேற்கொள்வதற்கான வழிகோளாக அமைவதுடன் அது ஆய்வாளருக்குத் தாம் மேற்கொள்ளும் ஆய்வைப் பற்றிய நல்ல புரிதைக் கொடுக்கும் என்பர் (Neuman, 2003). அந்த வகையில் பாரதியாரைப் பற்றி பல்வேறு ஆய்வுகள் இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் இந்த ஆய்வுக் கட்டுரைக்குப் பொருத்தமான சில படைப்புகள் ஆய்வு முன்னோடிகளில் முன்வைக்கப்பட்டுள்ளன.*

*தொடக்கமாக, ஜி. வேங்கடராமன் என்பாரின் “C Subramaniya Bharathiyar a Biographical Study 1882 1921” எனும் நூலும், உமா சம்பத் எனும் எழுத்தாளரின் “மகாகவி பாரதியார்” (2007), எனும் நூலும், ராமசாமி என்பவரின் “மகாகவி பாரதியார் வரலாறு”* (2017) *எனும் நூலும், மாட் ரவிகுமார எனும் எழுத்தாளரின்* “*Life Lessons: Tamil Poet Bharathi*” (2019) *எனும் நூலும் ஆய்வு முன்னோடிகளில் பார்க்கப்பட்டது. இந்நான்கு நூல்களும் பாரதியின் வாழ்க்கைப் பின்புலத்தைப் பற்றிப் பேசக் கூடியவை. ஆயினும் ஒவ்வொரு நூலும் அதன் படைப்பு முறையிலும், பாரதியின் வாழ்க்கையில்*

நிகழ்ந்த சம்பவங்களை விளக்கும் பாணியிலும் மாறுபட்டே விளங்குகின்றன. அந்த வகையில் பாரதியின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களைத் தற்போதைய ஆய்வுக் கட்டுரையின் தேடலுக்கு ஏற்பப் பார்ப்பதில் இந்நூல்கள் பெரிதும் உதவியுள்ளன.

அடுத்து, என்.எம்.ஏ.கற்பகன் என்பாரின் "*Subramania Bharathi as An Internationalist*" (2015) எனும் நூல் பாரதியை ஒரு உலகச் சிந்தனையாளனாகப் பார்த்துள்ளது. இந்நூல் பிரிட்டிசாரிடம் இருந்து விடுதலை, உலக மக்கள் ஏழ்மையில் இருந்து விடுதலை, உலக ஒற்றுமை எனும் மூன்று கருப்பொருள்களில் பாரதியைப் பார்த்துள்ளது. அடுத்து மீரா தி. சுந்தரா என்பாரின் "*Subramania Bharati-The Eternal Revolutionary*" எனும் நூலோ பாரதி உலகில் சிந்தனை மாற்றத்திற்கு மேற்கொண்ட ஆளுமைகளை விளக்குவதாகப் படைக்கப்பட்டுள்ளது. இவ்விரு நூல்களும் தற்போதைய ஆய்வில் பாரதியைப் பற்றிய புதிய கண்ணோட்டத்தைத் தந்துள்ளன.

மேலும் சீனு இராமச்சந்திரன் என்பவரின் "*புதுவையில் பாரதி*" (2008) எனும் நூல் பாரதியின் புதுவை வாழ்க்கையைப் பற்றியும் அவர் அங்கு மேற்கொண்ட புரட்சிகள் பற்றியும் விளக்குகிறது. அது போலவே "*பாரதியின் இறுதிக்காலம்*" (2014) எனும் ய.மணிகண்டனின் நூலும் பாரதியின் வாழ்க்கையைப் பற்றிப் பல்வேறு செய்திகளை முன்வைப்பனவாக உள்ளது.

தொடர்ந்து பார்வதி வெள்ளைச்சாமி என்பாரின் "பாரதியார் படைப்புகளில் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைக் கோட்பாடுகள் ஒரு பார்வை" (2015) எனும் ஆய்வுக் கட்டுரையும் கே முருகேசன் என்பாரின் "புதுக்கவிதையின் பிதாமகன் பாரதி" எனும் ஆய்வுக் கட்டுரையும் *தமிழ்ப் பேராய்வு ஆய்விதழில்* படைக்கப்பட்டுள்ளன. இவ்விரு கட்டுரைகளும் பாரதியைப் பற்றிய இன்னும் அதிகமான புரிதல்களை இந்த ஆய்வில் கொடுத்துள்ளன.

**ஆய்வு நெறி**

இலக்கியப் படைப்புகள் மற்றும் தனிமனித வாழ்க்கையைப் பற்றி ஆய்வு செய்வதற்குப் பண்புசார் ஆய்வு நெறியே மிகவும் சிறந்த நெறியாக விளங்குகிறது (Creswell, 2003). இந்த ஆய்வு நெறியின் மூலம் ஓர் ஆய்வில் பொதிந்துள்ள உட்பொருளை கண்டறிவது மிகவும் நேர்த்தியாகவும் இலகுவாகவும் நிகழும் (Merrian, 2009). மேலும் பண்புசார் ஆய்வு நெறியுடன் தொடர்புடைய Hermanutic எனப்படும் விளக்கமுறை நெறியானது இது போன்ற ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மிகவும் பொருத்தமானதாக இருப்பதால் தற்போதைய ஆய்வானது பண்புசார் ஆய்வுநெறிமுறையில் விளக்கமுறைக் கோட்பாட்டை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது (Melissa Freeman, 2008).

**நிலைத்தன்மை**

நெஞ்சுரம் மிக்க ஒருவன் எத்தகைய சூழ்நிலையிலும் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வது கிடையாது. இவர்கள் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் தாம் கொண்ட கொள்கையை விட்டு நீங்குவது இல்லை. மேலும் தான் எடுத்துக் கொண்ட கொள்கையில் நிலையாக நிற்பதற்காகச் சூழ்நிலை, உணர்ச்சிகள், சிக்கல்கள் போன்ற எதற்கும் அசைந்து கொடுக்காது முன்னோக்கிச் செல்வர் (Manning & Curtis, 2007). இந்த நிலைத்தன்மை பாரதியிடத்தில் நிறைவாகக் காணப்பட்டது.

பாரதி நினைத்திருந்தால் அல்லது தனது கொள்கையில் இருந்து கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போயிருந்தால் அவர் மிகவும் வசதியாக வாழ்ந்திருக்கலாம். எட்டையபுரம் சமஸ்தானத்தில் அவருக்கு மன்னருக்கு தோழமை போன்ற பணிதான் வழங்கப்பட்டது. ஆனாலும் யாருக்கும் அடிமையில்லை எனும் பாரதியின் நெஞ்சுரம் அவரை அந்தப் பணியைத் தூக்கி எறியச் செய்தது (உமா சம்பத், 2007). "பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்" (*பாரதியார் கவிதைகள்,* 2015) எனும் தனது சொல்லுக்கேற்ப வாழ்ந்தவர் பாரதி.
மேலும், பாரதி தனது பாட்டினிலே,

> "பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்தாலும் -என்றன்
> கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து கவலை மிகுந்தாலும் -வாழ்வு

*கெட்டு நடுத்தெரு வோடு கிடந்து கீழ்நிலை யுற்றாலும் -மன்னர்*
*தொட்டு வளர்த்த தமிழ்மக ளின்துயர் துடைக்க மறப்பேனா?"*
*(பாரதியார் கவிதைகள், 2015)*

*எனும் தனது கவிதையின் மூலம் தனக்கு என்ன நேர்ந்தாலும் தமிழ் மக்களின் துயர் துடைக்கப் போராடுவேன் என்கிறார் பாரதி. "பசி வந்தால் பத்தும் பறந்து போம்" என்பர். ஆனால் பசியையும் துச்சமாக எண்ணும் இத்துனை நெஞ்சுரம் பாரதியைப் போன்றவர்களுக்கே சாத்தியம் ஆகும்.*

***யாருக்கும் இளைத்தவர் அல்ல***

*உலகில் யாருக்கும் தாம் இளைத்தவர் அல்ல என்பதில் பாரதி மிகவும் தெளிந்த சிந்தனை உடையவராக இருந்துள்ளார். மனிதன் ஏதாவது ஒரு சூழ்நிலையில் பிறருக்குக் கீழ்படிந்து செல்ல நேரிடலாம். இது அதிகாரத்தாலோ அல்லது சில வேலைகளில் அன்பினாலோ கூட நிகழலாம். ஆனால் பாரதி இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர். அவர் அங்கிIலேயப் பேரரசை எதிர்த்த காரணத்தால் பல நிலைகளில் பிரிட்டீசாருக்கு அடங்கிப் போகும் படி அச்சுறுத்தப்பட்டார். ஆனால் கடைசி வரை பாரதி அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு அடங்கிப் போகவே இல்லை.*

*இது இவ்வாறு இருக்க, தான் மிகவும் போற்றி மதிக்கும் காந்தி அடிகளிடமும் இவ்வாறே பாரதி இருந்ததுதான் ஆச்சரியம். ஒரு முறை காந்தி அடிகள் சென்னையில் முகாமிட்டிருந்த போது பாரதியார் யாருடைய அனுமதியையும் பொருள்படுத்தாமல் காந்தி அடிகள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார். அங்கு காந்தியடிகள் அமர்ந்திருந்த அதே விரிப்பில் தானே சென்று அமர்ந்தார். பின்னர், "மிஸ்டர் காந்தி! கடற்கரையில் நாளை பேசுகிறேன். நீங்கள் தலைமை வகிக்க வர வேண்டும்" என்று பாரதி கேட்டுக் கொண்டார், காந்தி அடிகளோ "கூட்டத்தை மறு நாளுக்கு மாற்ற முடியுமா?" என்று கேட்க, "அது முடியாது ஆனால், நீங்கள் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்துக்கு என்னுடைய ஆசி'' என்று காந்தியடிகளுக்கே ஆசி வழங்கி விட்டுத் தான் வந்த வழியே சென்றார் பாரதி (இராமசாமி, 2017). இது பாரதியின் அசாத்தியமான நெஞ்சுரத்தால் விளைந்த சம்பவம்.*

***தன்னம்பிக்கை***

*எதையும் சாதிக்க முடியும் எனும் அசைக்க முடியாத மன உறுதியில் விளைவதுதான் தன்னப்பிக்கை. இந்தத் தன்னம்பிக்கை நிலைக்க வேண்டுமாயின் ஒருவரிடத்தில் அசாத்தியமான நெஞ்சுரம் வேண்டும் (Manning & Curtis, 2007). இத்தகைய அசைக்க முடியாத தன்னபிக்கையின் பிறப்பிடம்தான் பாரதி. பாரதியின் "மனதில் உறுதி வேண்டும்" (பாரதியார் கவிதைகள், 2015) எனும் பாடல் இவரின் தன்னம்பிக்கைக்குத் தக்கச் சான்று. தான் நினைத்தைச் சாதித்துக் காட்டுவேன் எனத் தொடர்ந்து போராடியவர் பாரதியார். இதனையே எல்லோருக்கும் சொல்கிறார்.*

*"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா*
*உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா*
*களிபடைத்த மொழியினாய் வா வா*
*கடுமைகொண்ட தோளினாய் வா வா*
*தெளிவுபெற்ற மதியினாய் வா வா*
*ஏறு போல நடையினாய் வா வா"* *(பாரதியார் கவிதைகள், 2015)*

*இதில் தன்னம்பிக்கை உடையவனிடத்தில் இருக்கவேண்டிய ஒளி, உறுதி, நன்மொழி, திடம், தெளிவு, கம்பீரம் ஆகிய அத்துணை குனாதிசயங்களையும் முன்வைக்கிறார் பாரதியார். மேலும் இவற்றை முன் வைப்பது மட்டும் அல்ல; மாறாக இவை அனைத்தும் பாரதியிடம் முழுமையாக இருந்தன. பசியால் களைத்திருந்த போதும் பாரதியின் கண்களில் ஒளி குன்றியதில்லை. எதிரிகள் எதிர்த்த போதும் அவர் அஞ்சியது கிடையாது. அவரது வாக்கு எப்போது தெய்வ வாக்காகவே இருந்திருக்கிறது. அவர் தோள்கள் சோர்ந்து சரிந்தது இல்லை. பாரதி மிகக் கடுமையான காலத்தை எதிர்கொண்டபோதும் தெளிந்த சிந்தனையுடந்தான் இருந்திருக்கிறார். அதற்குச் சான்று அவரின் பாடல்களே. அவரின் கம்பீர*

நடையும் எப்போது நிமிர்ந்து அமரும் பாங்கும் பார்ப்பவரையும் ஆட்கொள்ளும் (வலம்புரிஜான், 1998).

ஒரு முறை பாரதி ஒரு திருமண விருந்தில் கலந்து கொண்ட போது தனது அருகில் அமர்ந்திருந்த சிறுவன் ஒருவன் முதுகு வளைய அமர்ந்திருந்ததைக் கண்ட "நிமிர்ந்து உட்காரடா கூனப்பாண்டியா" என்றாராம். அந்த கம்பீரமான சொல்லைக் கேட்டதும் பந்தியில் இருந்த அனைவரும் தங்களையும் அறியாமல் நிமிர்ந்து அமர்ந்தார்களாம் (உமா சம்பத், 2007).

இவ்வாறாகத் தான் மட்டும் அல்லாமல் தன்னுடன் சார்ந்தவர்களையும் தனது அசாத்திய நெஞ்சுரத்தால் தன்னம்ப்பிக்கை உடையவர்களாக மாற்றிய ஆளுமையாளர் பாரதி.

**துணிவு**

உண்மையான நெஞ்சுரம் மிக்கவரின் மிகப்பெரிய பலமே துணிவுதான். துணிவு என்பது எந்தச் சோதனைகளையும் கண்டு அஞ்சாமல் முன்னேறும் குணமாகும் (John Maxwell, 2008). பாரதியைப் பொருத்த வரையில் அவர் எதற்கும் அச்சம் கொண்டதில்லை. பாரதி,

"எதிர் வேரிது விடர்பட மாட்டோம்
அண்டம் சிதறினாலும் அஞ்சமாட்டோம்
யார்க்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம்;
எங்கும் அஞ்சோம், எப்பொழுதும் அஞ்சோம்" (பாரதியார் கவிதைகள், 2015)

என்று முழங்குகிறார். மேலும் தனது தலை மீது வானமே இடிந்து விழுந்தாலும் "உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும், அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே" (பாரதியார் கவிதைகள், 2015) என்று பாடுகிறார். அவருக்கு எதிலும் பயமில்லை. எப்படி பாரதிக்கு இத்துணை நெஞ்சுரம் வந்தது. அதற்கும் அவரே பதில் கூறுகிறார்.

"காக்கை சிறகினிலே நந்தலாலா - நின்றன்
கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா - நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா
கேட்கும் ஒளியில் எல்லாம் நந்தலாலா - நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா - நின்னை
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா" (பாரதியார் கவிதைகள், 2015)

இப்படிப் பார்ப்பவை அனைத்திலும் பரப்பிரம்மத்தைக் காணும் ஞானம் பெற்றோருக்கு எது குறித்தும் அச்சமில்லை. அதனால்தான் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் யானைக்கு மதம் பிடித்திருக்கிறது எனத் தெரிந்தும் பாரதி அதன் அருகில் சென்றார். அதனையும் பிரம்மத்தின் தோற்றமாகக் கண்டதால் அங்குப் பாரதியிடம் பயமில்லை. ஞானியர்க்கு எதிலும் பயமில்லை. ஞானியான பாரதிக்கும் பயம் துளியும் இல்லை (மணிகண்டன், 2014).

**தனித்துவம்**

நெஞ்சுரம் மிக்கவர் எப்போது பிறரைப் போல இருப்பதில்லை. இவர்கள் தனித்துவம் மிக்கவர்களாகவே விளங்குவர். தனக்கான தனித் தன்மையினால் பிறரை வேண்டுமானால் தன் வசப்படுத்துவர். யாரையும் பார்த்துத் தன்னை மாற்றிக் கொள்வதில்லை (Manning & Curtis, 2007). அதனால்தான் பாரதியின் தோற்றமே வித்தியாசமாக இருக்கும். தலையில் தலைப்பாகை, முறுக்கிய மீசை, வேட்டி சட்டை, அதன்மேல் மேலங்கி என வித்தியாசமான தோற்றம் பாரதியின் தோற்றம். ஆனால் இன்று பல இளைஞர்களோ அதனை அடையாளக் குறியீடாகத் தங்களின் சட்டைகளில்

பதித்துக் கொள்வதைப் பார்க்கலாம். இதுதான் தனித்துவமும் தனது தனித்துவத்தால் மிளிர்வதுவும் ஆகும்.

*"தேடிச் சோறுநிதந் தின்று — பல*
*சின்னஞ் சிறுகதைகள் பேசி — மனம்*
*வாடித் துன்பமிக உழன்று — பிறர்*
*வாடப் பலசெயல்கள் செய்து — நரை*
*கூடிக் கிழப்பருவ மெய்தி — கொடுங்*
*கூற்றுக் கிரையெனப் பின்மாயும் — பல*
*வேடிக்கை மனிதரைப் போலே — நான்*
*வீழ்வேனென்றுநினைத் தாயோ?"* (பாரதியார் கவிதைகள், 2015)

எனும் பாரதியின் வாக்கு தான் ஒரு அசாதாரனன் என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

**விவேகம் மிக்க நெஞ்சுரம்**

உண்மையான தெளிந்த சிந்தனையால் தான் செய்யும் செயல்களில் பிடிப்பை உடையவன் விவேகியாக இருப்பான். நெஞ்சுரம் இருக்கிறது என்பதற்காக எதிலும் முட்டி மோதிக் கொள்வதை இது போன்றவறவர்கள் செய்வது கிடையாது.

பாரதி பிரிட்டீசாரின் தொல்லைகளில் இருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காகச் சிறிது காலம் புதுவையில் வாழ்கிறார் (இராமச்சந்திரன், 2008). அப்படி வாழும் காலத்தில் அவர் பிரிட்டிசாருக்குப் பயந்து இருந்ததாகப் பொருள் கொள்ளுதல் தவறாகும். உண்மையில் பாரதியின் இச்செயல் அவரது விவேகத்தைக் குறிக்கிறது. பாரதி இவ்வாறு செய்யாதிருந்தால் நிச்சயமாக ஆங்கிலேயர்களால் சிறையில் அடைக்கப்பட்டிருப்பார். அப்படி நடந்திருந்தால் பாரதியின் போராட்டமும், படைப்புகளும் இல்லாமலேயே போயிருக்கும்.

இத்தகைய சூழல்களை நன்குணர்ந்து விவேகத்துடன் செயல்பட்ட பாரதியின் உள்ளத் தெளிவும், அதனால் அவர் ஆற்றிய காரியங்களும் பாரதியின் நெஞ்சுரத்தால் விளைந்ததுவே.

**முடிவுரை**

பாரதி தனது வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகளைக் கண்டபோதும் அத்தனையையும் தனது நெஞ்சுரத்தால்ல் வென்று சாதனைகளாக்கியவர். இதற்கு அவரிடத்தில் இருந்த நிலைத்தன்மை, யாருக்கும் அடிமை செய்யாத போக்கு, தன்னம்பிக்கை, துணிவு, தனித்துவம், விவேகம் மிக்க நெஞ்சுரம் போன்ற குணாதிசயங்களே காரணமாகும். இத்தகைய அசாத்திய குணங்களால் பாரதி செயற்கரிய செயல்களைப் புரிந்தவர்.

பாரதியின் நெஞ்சுரம் வைரத்தை விட வலிமையும் ஒளியும் பொருந்தியது. அவரது வாழ்க்கையில் பாரதி கண்ட சோதனைகளும் அதனை அவர் தனது நெஞ்சுரத்தால் வேன்ற பாங்கும் எக்காலத்தும் மறுக்கவும் மறக்கவும் இயலாத செயல்களாகும். சோர்ந்து போயிருக்கும் உள்ளங்களுக்கு பாரதியின் நெஞ்சுரம் உத்வேகம் அளிக்க வல்லது. பாரதியின் இந்த நெஞ்சுரத்தை ஒருவர் அடைய வேண்டின் அம்மனிதன் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் மாறுபடாத தன்மையில் இருத்தல் வேண்டும். அதுதான் பாரதி புகட்டும் பாடம்.

**துணைக்குறிப்பு நூல்கள்**


இராமச்சந்திரன், சீனு. (2008). *புதுவையில் பாரதி.* புதுச்சேரி: புதுச்சேரி கூட்டுறவு புத்தகச் சங்கம்.

இராமசாமி, வ. (2017). *மகாகவி பாரதியார்.* புஸ்தாகா டிஜித்தல் மீடியா.

உமா சம்பத். (2007). *மகாகவி பாரதியார்.* பிரொடிஜி புக்ஸ்.

சுப்பிரமணிய பாரதியார். (2015). *பாரதியார் கவிதைகள்.* Mukil E Publishing And solutions Private Limited.

பார்வதி வெள்ளைச்சாமி. (2016). "பாரதியார் படைப்புகளில் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைக் கோட்பாடுகள் ஒரு பார்வை". *தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்.* (தொகுதி, 2. எண்.1).

மணிகண்டன், ய. (2014). *பாரதியின் இறுதிக் காலம்*". நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.

முருகேசன், க. (2015). "புதுக்கவிதையின் பிதாமகன் பாரதி", *தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்.* (தொகுதி, 1. எண்.1).

வலம்புரிஜான். (1998). *பாரதி ஒரு பார்வை.* சென்னை: சுடர்க்கொடி பதிப்பகம்.

Karpagan, N. M. A. (2015, January). *Maha Kavi Subramania Bharathi as An Internationalist*. In Proceedings of the Indian History Congress (Vol. 76, pp. 669- 677). Indian History Congress.

Lawrence Neuman, William. (2003). *Social Research Methods Qualitative and Quantitative Approaches*. Boston: Pearson Education Inc.

Manning George & Curtis Kent. (2007). *The Art of Leadership*. New York: McGraw-Hill.

Matt Ravikumar. (2019). *Life Lessons: Tamil Poet Bharathi*. Independently Published.

Maxwell, John. (2008). *The 21 Indispensable Qualities of A Leader*. Kuala Lumpur: PTS Professional.

Melissa Freeman. (2008). Hermaneutics. In M., Given Lisa (Ed.), *The Sage Encyclopedia of Qualitative Research Methods*. (Vol. 1, pp. 385-388). London: Sage Publication, Inc.

Merrian, B., Sharan. (2009). *Qualitative Research A Guide to Design and Implementation*. San Francisco: A Wiley Imprint.